00029

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப்பீடம்
பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022
இறுதிப்பரீட்சை – 2023
கட்டம் - II

**STP8210/STP8309/ESP2109 – சிறுவர் உரிமைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 10.12.2023 நேரம்: மு.ப. 09.30 - மு.ப 12.30

- பகுதி **I** இன் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இன் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி – I

1. இலங்கையில் காலனித்துவத்திற்கு முற்பட்ட காலப்பகுதி அத்துடன் நவீன காலப்பகுதியின் போது சிறுவர் உரிமைகளது நிலைமையினை சுருக்கமாக ஒப்பிடுக.

2. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தொழிற்பாடுகள் **ஐந்தினைக்** (05) குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றிற்கு** (01) சுருக்கமான விளக்கத்தினை வழங்குக.

3. இலங்கையில் 1900 – 2000 வரையிலான காலப்பகுதியில் சிறுவர் நலன்புரியுடன் தொடர்புபட்ட வகையில் காணப்படுகின்ற **ஐந்து** (05) சட்டமூலங்களைக் குறிப்பிடுக.

4. விசேட சூழ்நிலைக்குட்பட்ட சிறுவர்கள் யார்? என்பதை சுருக்கமாக விளக்கி விசேட சூழ்நிலைக்குட்பட்ட சிறுவர்களை பாதுகாப்பதில் இலங்கை அரசாங்கத்தினது பொறுப்புக்கள் **மூன்றினைப்** (03) பட்டியற்படுத்துக.

5. "தற்போது பாலியல் துஷ்பிரயோகங்கள் பொதுவானவை என்பது ஊடகங்கள் வெளிப்படுத்தும் கருத்தாகும்" பெற்றோர்கள் தங்களது சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகிக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கு பிரயோகிக்கக் கூடிய உத்திகள் **மூன்றினைச்** (03) சுருக்கமாக ஆராய்க.

6. தத்தெடுப்பு (Adoption) என்றால் என்ன? என்பதை பொருத்தமான உதாரணமொன்றினூடாக விளக்குக.

7. வளர்ச்சிக்கும் விருத்திக்குமான உரிமையை நிலைநாட்டுவதற்கு இலங்கை அரசாங்கத்தினால் சுதந்திரத்திற்கு பின்பு முன்னெடுக்கப்பட்ட **ஐந்து** (05) முக்கிய படிகளைச் சுருக்கமாக விளக்குக.

8. சிறுவர் உரிமைகள் தொடர்பில் உலக சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பொருத்தமான **ஐந்து** (05) ஆக்கபூர்வ தொடர்பாடல் உத்திகளை அறிமுகப்படுத்துக.

**பகுதி - I (5 x 8 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.
   **i.** சிறுவர் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடு (UNCRC) என்றால் என்ன? **(04 புள்ளிகள்)**

   **ii.** ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமை தொடர்பான மாநாட்டின் உறுப்புரை - 03 "சிறுவர்களின் மேம்பட்ட நலன்கள்" தொடர்பில் குறிப்பிடுகின்றது. இது பற்றிய உமது கருத்தைச் சுருக்கமாக விளக்குக. **(06 புள்ளிகள்)**

   **iii.** இலங்கையில் சிறுவர்களின் மேம்பட்ட நலன் தொடர்பில் மேம்படுத்தும் கொள்கையை பாதிக்கும் தடைகள் **மூன்றினை** (03) பொருத்தமான உதாரணங்களுடன் பரிசீலனை செய்க. **(10 புள்ளிகள்)**

10.

i. உயிர் வாழ்வதற்கான உரிமை என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

ii. இலங்கையில் தற்போது காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடி பாடசாலை சிறுவர்களின் உயிர் வாழ்வதற்கான உரிமை மீது வலுவான தாக்கத்தை செலுத்தியுள்ளது. இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா அல்லது உடன்படவில்லையா என்பதனை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. (08 புள்ளிகள்)

iii. இலங்கையில் தற்போது சிறுவர்களின் சுகாதாரம் அத்துடன் போஷாக்கு நிலைமையை மேம்படுத்துவதற்கு ஆதரவு வழங்கும் வகையில் உங்களால் என்ன செய்யமுடியும் என்பதை விவரிக்குக. (10 புள்ளிகள்)

11.

i. சிறுவர்களுடன் தொடர்புபட்ட வகையில் குற்றம் அத்துடன் துஷ்பிரயோகம் என்ற பதத்தை வரையறுக்குக. (04 புள்ளிகள்)

ii. **"சிறுவர் துஷ்பிரயோகம் பல்வேறு காரணங்களுக்காக இடம்பெறுகின்றது"**
சிறுவர் துஷ்பிரயோகத்தின் சாத்தியமான வடிவங்கள் **மூன்றினைச்** (03) சுருக்கமாக எழுதுக. (06 புள்ளிகள்)

iii. உங்களது வகுப்பறையில் ஒரு சிறுவர் உடலியல் ரீதியாக துஷ்பிரயோத்திற்கு உட்பட்டுள்ளார் என நீர் தகவலை பெறுகின்ற போது ஒரு ஆசிரியராக மேற்கொள்ளக் கூடிய உத்திகளை குறிப்பிடுக. (**நான்கு** (04) உத்திகள் குறிப்பிடப்படல் வேண்டும்.) (10 புள்ளிகள்)

12.

i. பங்குபற்றல் உரிமை என்றால் என்ன? என்பதை சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

ii. கற்பித்தல் மற்றும் கற்றல் செயன்முறையில் ஒரு ஆசிரியராக மாணவர்களது பங்குபற்றல் உரிமையை பாதுகாப்பதற்கு முன்னெடுக்கக் கூடிய படிகள் **மூன்றினை** (03) விளக்குக. (06 புள்ளிகள்)

iii. மேற்கூறப்பட்ட படிகளை செயற்படுத்துகையில் நீர் எதிர் நோக்குகின்ற சவால்கள் **நான்கினைக்** (04) குறிப்பிட்டு, அவற்றை எவ்வாறு குறைக்க முடியும் என்பதற்கான ஆலோசனைகளை வழங்குக. (12 புள்ளிகள்)

13.

i. இலங்கை அரசாங்கத்தினால் சிறுவர் உரிமைகள் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய முயற்சிகள் **நான்கினை** (04) எழுதுக. (04 புள்ளிகள்)

ii. மேற்குறிப்பிட்ட முயற்சிகளை நடைமுறைப்படுத்தும் போது இலங்கை அரசாங்கத்தினால் எதிர்நோக்கப்படுகின்ற பிரச்சினைகள் **மூன்றினைச்** (03) சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

iii. மேற்கூறப்பட்ட பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்கான குறைந்தது **நான்கு** (04) ஆலோசனைகளைத் தயாரிக்குக. (10 புள்ளிகள்)

14. **"ஆசிரியர்கள் மாணவர்களை புரிந்துகொண்டு கையாள்கின்ற போது சிறுவர் உரிமகள் பாதுகாக்கப்படுகின்றன."**

i. இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா என்பதற்கு உமது கருத்தைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

ii. பாடசாலை இடைவேளையின் போது சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கு ஆசிரியர்களினால் பிரயோகிக்கக்கூடிய ஆக்கபூர்வ உத்திகள் **நான்கினை** (04) விளக்குக. (08 புள்ளிகள்)

iii. பாடசாலை இடைவேளையில் ஆக்கபூர்வ உத்திகள் **மூன்றினை** (03) நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு பொருத்தமான குறுகிய நிகழ்சித்திட்டத்தை முன்வைக்குக. (08 புள்ளிகள்)

பகுதி - **II**- 60 புள்ளிகள்

பகுதி - **I,II** – 100 புள்ளிகள்

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -